DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name சக்தி முருகன் | Father/Husband Name : ஆறுமுகம் |
| Age : 56 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : ஆட்டு வியாபாரம். கறிக்கடை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Feb 7, 2026 11:34 AM

Accused present.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :-

1. எதிரியை எனக்கு சுமார் மூன்று ஆண்டுகளாக தெரியும். எதிரி எனக்கு யார் மூலம் அறிமுகம் என்றால் திருமங்கலத்தில் உள்ள கண்ணன் என்பவர் மூலம் அறிமுகமாகும். எதிரி என்ன வேலை செய்து வருகிறார் என்பது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் அவர் ரியல் எஸ்டேட் மற்றும் தையல் தொடர்புடைய தொழில் செய்து வருவதாக கண்ணன் மூலமாக கேள்விப்பட்டேன். கடந்த மூன்று ஆண்டுகளாக எனக்கும் எதிரிக்கும் கண்ணன் மூலமாக நல்ல தொடர்பு இருந்தது என்றால் சரிதான். அதன் மூலம் எங்கள் இருவருக்கும் இடையே ஏற்கனவே கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் சரிதான். ஆகையால், எதிரி என்னிடம் நல்ல நன்மதிப்போடு, பழக்கவழக்கத்தில் இருந்தார் என்றால் சரிதான்.

2. நான் எதிரிக்கு ரூபாய் 5,00,000/-ஐ யார் மூலமாக கொடுத்தேன் என்றால் என்னுடைய கடைக்கு வந்து அவர் வாங்கி சென்றார். இப்பொழுது எதிரியுடன் வேறு யார் வந்திருந்தார் என்றால் அவருடைய கார் ஓட்டுநர் வந்திருந்தார். அப்பொழுது அவர் எனக்கு என்ன ஆவணத்தை எழுதிக் கொடுத்தார் என்றால் கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்தார். யார் சாட்சிகளாக கையொப்பம் செய்தார்கள் என்றால் என்னுடைய கடையில் வேலை பார்க்கும் குமார் என்பவர் சாட்சியாக கையொப்பம் செய்தார். அந்த கடனுறுதி சீட்டை யார் எழுதினார் என்றால் எதிரியே அதை எழுதிக் கொண்டு வந்தார். அந்த ஆவணத்தில் அதை எழுதியது யார் என்பது குறிப்பிட்டு இருக்கும் என்றால் அது எனக்கு சரியாக தெரியவில்லை.

3. எதிரி என்னிடம் ரூபாய் 5,00,000/-ஐ எதற்காக வாங்கினார் என்றால் அவருடைய குடும்ப செலவுக்காக வாங்கினார். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் ஆட்டு வியாபாரம் செய்து வருகிறேன், மற்றும் கறிக்கடை வைத்துள்ளேன். நான் மேற்படி தொழில் செய்து வருவதாக நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் இந்த வழக்கில் தாக்கல் செய்த புகார் மனு, சாட்சிய வாக்குமூலம் ஆகியவற்றில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு கடன் கொடுத்த தொகைக்கு வட்டி விகிதம் எவ்வளவு என்றால் ஒரு பைசா (ஆண்டுக்கு 12%) வட்டியாகும். சாட்சி, எதிரிக்கு கொடுத்த பணத்தை பழக்கத்தின் அடிப்படையில் கைமாற்றாக கொடுத்ததாகவும் வட்டி பற்றி எதுவும் பேசவில்லை என்றும், வட்டி வாங்கவில்லை என்றும் கூறுகிறார். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள புகார் மனு மற்றும் சாட்சிய வாக்குமூலத்தில் எதிரிக்கு 12 சதவிகிதம்

வட்டிக்கு தான் கடன் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

4. ரூபாய் 5,00,000/– பெரிய தொகை என்பதால் நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக கூறும் தேதியில் அவரிடம் இருந்து வேறு ஆவணம் எதுவும் வாங்கினேனா என்றால் இல்லை. எதிரி எழுதிக் கொடுத்ததாக கூறும் கடனுறுதிச் சீட்டில் எங்கள் இருவருக்கும் பொதுவான நபரான கண்ணன் என்பவரிடம் சாட்சிக்கு கையொப்பம் வாங்கினேன் என்றால் கண்ணனை அன்றைய தினம் அழைத்து வரவில்லை என்பதால் அவரிடம் கையெழுத்து வாங்கவில்லை. நான் கண்ணனுக்கு போன் செய்து எதிரி ரூபாய் 5,00,000/– கேட்டு வந்திருப்பதாகவும், கடன் கொடுக்க போவதாகவும் கூறினேனா என்றால் கூறினேன். இந்த விபரத்தை நான் அறிவிப்பு, புகார் மனு மற்றும் சாட்சிய வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான்.

5. 07.10.2024ம் தேதி எதிரி எனக்கு காசோலை கொண்டு வந்து கொடுத்ததாக கூறுவது மாலை 04.00 மணியா? என்றால் காலை 09.00 மணி இருக்கும். அப்பொழுது எதிரியுடன் யார் வந்திருந்தார் என்றால் அவருடைய ஓட்டுநர் வந்திருந்தார். எதிரி எங்கு வைத்து அவருடைய காசோலையை கொடுத்துவிட்டு கடனுறுதிச் சீட்டை திரும்ப வாங்கிக் கொண்டார் என்றால் என்னுடைய கறிக்கடையில் வைத்து ஆகும். 07.10.2024 ஆம் தேதி எதிரியும் அவருடைய ஓட்டுனரும் என்னுடைய கறிக்கடைக்கு வந்த போது நான் எதிரியிடம் ரூபாய் 5 லட்சம் மற்றும் அதற்கான வட்டியை கேட்டேன் என்றால் நான் அவரிடம் எனக்கு வர வேண்டிய பணத்தை கேட்டபோது அவர் என்னுடைய கடைக்கு வந்து காசோலையை கொடுத்துவிட்டு அவசரமாக சென்று விட்டார். ஆகையால் கடனுறுதி சீட்டு என்னிடம் தான் இருந்தது என்றால் அதை அவர் வாங்கி சென்று விட்டார்.

6. 07.10.2024 ஆம் தேதி எதிரி என்னுடைய கடைக்கு வந்தபோது நான் அவரிடம் பணத்தை கேட்டேனா? அல்லது காசோலையை கேட்டேனா என்றால் பணத்தை தான் கேட்டேன். நான் காசோலை கேட்கவில்லை என்றால் சரிதான். நான் எதிரியிடம் எனக்கு காசோலை தேவையில்லை பணத்தை கொடுங்கள் என்று கேட்டேனா என்றால் கேட்டபோது அவருடைய வங்கி கணக்கில் பணம் இருப்பதால் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்து பணத்தை எடுத்துக் கொள்ளுமாறு கூறினார். நான் எதிரியிடம் நீங்களே வங்கிக்கு சென்று பணத்தை எடுத்து பணத்தை கொடுத்து விட்டு கடனுறுதிச் சீட்டை வாங்கிச் செல்லுங்கள் என்று நான் ஏன் கூறவில்லை என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் காசோலையை வாங்கி வைத்துக் கொண்டேன். எதிரி எந்த தேதியில் காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்யுமாறு கூறினார் என்றால் கசோலையை கொடுத்த அன்றைய தினமே வசூலுக்காக தாக்கல் செய்யுமாறு கூறினார், நான் உடனடியாக சென்று என்னுடைய வங்கி கணக்கில் காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்தேன்.

7. காசோலையில் எனக்கு தரவேண்டிய ரூபாய் 5,00,000/– மற்றும் அதற்கான வட்டி சேர்த்து தான் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் ரூபாய் 5,00,000/–திற்கு மட்டும் பூர்த்தி செய்யப்பட்டது. நான் வட்டி தொகையை எதற்காக காசோலையில் சேர்க்க கூறவில்லை என்றால் எதிரி காசோலையை பூர்த்தி செய்து கொண்டு வந்ததால் அவர் கொடுத்ததை வாங்கிக் கொண்டேன். வட்டியை அவர் சென்று பின்னர் தருவதாக கூறியதால் நான் காசோலையை வாங்கிக் கொண்டேன். வட்டி பாக்கி இருக்கக்கூடிய

நிலையில் நான் கடனுறுதிச் சீட்டை எதற்காக எதிரியிடம் திருப்பிக் கொடுத்தேன் என்றால் மனிதாபிமான முறையில், எங்களுக்கு இடையே இருந்த பழக்கவழக்கத்தின் அடிப்படையில் திருப்பிக் கொடுத்தேன்.

8. காசோலை திருப்பப்பட்ட பிறகு எதிரியிடம் நான் சாட்சிகள் மூலமாகவோ அல்லது எங்கள் இருவருக்கும் நண்பரான கண்ணன் என்பவர் மூலமாகவோ பணத்தை கேட்டேனா என்றால் நான் அவருக்கு போன் செய்தபோது எதிரி போனை எடுக்கவில்லை. காசோலை திரும்பப் பெற்ற பிறகு எதிரியின் வீட்டிற்கு சென்றேனா என்றால் நான் சென்றபோது அங்கு அவர் இல்லை. நான் எதிரியின் வீட்டின் அருகே குடியிருக்கும் நபர்களிடம் எதிரி எனக்கு பணம் தர வேண்டியுள்ளது என்பது தொடர்பாக எதுவும் கூறினேன் என்றால் இல்லை.

9. நான் என்னுடைய அறிவிப்பு, புகார் மற்றும் சாட்சிய வாக்குமூலத்தில் எதிரி என்னுடைய நன்மதிப்பை பெற்றவர் என்பதால் அவருக்கு கடன் கொடுத்தேன் என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி எதிரி எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பி இருந்தார் என்றால் சரிதான். எதிரி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் படித்துப் பார்த்தேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் எதிரி முருகேஸ்வரி மற்றும் செல்வ கணேஷ் இருவரையும் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார் என்று கூறியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

10. என்னுடைய மனைவி பெயர் உமா மகேஸ்வரி ஆகும். அவருக்கு எந்த வங்கியில் கணக்கு இருக்கிறது என்றால் சிட்டி யூனியன் வங்கியில் கணக்கு இருக்கிறது. வேறு வங்கியில் கணக்கு இல்லை. என்னுடைய மனைவியின் வங்கி கணக்கிற்கு மேற்படி செல்வ கணேஷ் மாதம் மாதம் ரூபாய் 15,000/-ஐ வட்டி பணமாக அனுப்பியுள்ளார் என்று எதிரி அவருடைய அறிவிப்பில் கூறியுள்ளார் என்றால் பணத்தை அனுப்பினாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னுடைய மனைவி என்னிடம் அவருடைய வங்கி கணக்கிற்கு மாதம் ரூபாய் 15,000/- வருகிறது என்று என்னிடம் எதுவும் கூறினாரா என்றால் அந்த பரிவர்த்தனை பற்றி எனக்கு எதுவுமே தெரியாது.

11. நான் மேற்படி முருகேஸ்வரி மற்றும் செல்வ கணேஷ் ஆகிய இருவருக்கும் தான் பணம் கொடுத்தேன் என்றாலும், அவர்களுக்காக இந்த வழக்கு எதிரியும், ராஜலட்சுமி என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார்கள் என்றாலும் சரியல்ல. அவர்கள் இருவரும் என்னுடைய மனைவியின் பெயருக்கு கடனுறுதி சீட்டு மற்றும் காசோலை கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. முருகேஸ்வரி மற்றும் செல்வ கணேஷ் ஆகிய இருவரும் என்னிடம் ரூபாய் 5,00,000/-ஐ கடனாக வாங்கினார்கள் என்றாலும், அந்த இரண்டு நபர்களும் எனக்கு அறிமுகம் இல்லாத நபர்கள் என்பதால், நான் எனக்கு நன்கு தெரிந்த இந்த வழக்கு எதிரியிடம் இருந்து பிணயமாக அவருடைய காசோலை ஒன்றை வாங்கிக் கொண்டேன் என்றாலும், மேற்படி தொகை ரூபாய் 5,00,000/-ற்கு வட்டியாக மாதம் ரூபாய் 15,000/-ஐ செல்வகணேஷ் அவருடைய வங்கி கணக்கில் இருந்து என்னுடைய மனைவியின் வங்கி கணக்கிற்கு அனுப்பி வந்தார் என்றாலும், வட்டி செலுத்துவதை செல்வகணேஷ் நிறுத்தியதும் நான் எதிரியின் காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி பதில் அறிவிப்பில் கூறியுள்ள விபரங்களை நான் உண்மை என்று ஏற்றுக் கொண்டதால் தான் அதற்கு மறுப்பு அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும்,

பதில் அறிவிப்பில் உள்ள விபரங்களை மறுத்து என்னுடைய புகார் மற்றும் சாட்சிய வாக்குமூலத்தில் கூறவில்லை என்றாலும் சரியல்ல.

12. நான் எனக்கு முருகேஸ்வரி மற்றும் செல்வகணேஷ் கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்கவில்லை என்று கூறி நானும் இந்த வழக்கு எதிரியும் திருமங்கலம் நகர் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றோம் என்றால் இல்லை. முருகேஸ்வரி மற்றும் செல்வகணேஷ் ஆகிய இருவரும் எனக்கு கொடுக்க வேண்டிய பணத்தை அவர்கள் கொடுத்து விடுவதாக கூறிய போதிலும், எதிரியிடமிருந்து பணத்தை பெறுவதற்காக எதிரி என்னிடம் 2022 ஆம் ஆண்டு பிணையமாக கொடுத்திருந்த காசோலையை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகையால் நான் தான் எதிரிக்கு நம்பிக்கை மோசடி செய்துள்ளேன் என்றாலும், எதிரி எந்த கட்டத்திலும் எனக்கு நம்பிக்கை மோசடி செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆகையால் இந்த வழக்கு காசோலை சட்டப்படி கொடுக்க வேண்டிய கடனுக்காக கொடுக்கப்பட்டதல்ல என்றால் சரியல்ல. அதனால்தான் நான் என்னுடைய புகாரில் எதிரிக்கு வட்டிக்கு கடன் கொடுத்ததாக கூறிவிட்டு, என்னுடைய சாட்சியத்தில் அதை மறுத்து கூறியுள்ளேன் என்றாலும், முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

13. உண்மையிலேயே நான் எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் அவரிடம் வட்டியுடன் சேர்த்து பணத்தை வாங்கியிருப்பேன் என்றாலும், காசோலையை வாங்கியிருக்கமாட்டேன் என்றாலும் சரியல்ல. உண்மையிலேயே எதிரி என்னிடம் வட்டிக்கு கடன் வாங்கி இருந்தால் அவரிடம் காசோலையை வாங்கும்போது வட்டித் தொகையையும் சேர்த்து பூர்த்தி செய்து வாங்கி இருப்பேன் என்றாலும், நான் கூறுவது போல் எதிரிக்கு கடன் எதுவும் கொடுக்கவில்லை என்பதால்தான் அவ்வாறு காசோலை பெறவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்பதால் தான் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் எதிரி என்ன காரணத்திற்காக என்னிடம் கடன் வாங்கினார் என்பதை கூறவில்லை என்றால் சரியல்ல. யார் முன்னிலையில் எதிரி என்னிடம் கடன் வாங்கினார் என்ற விபரத்தையும் நான் என்னுடைய வழக்கில் கூறவில்லை என்றால் சரியல்ல.

14. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் கொடுக்கப்பட்ட காசோலை காலாவதியான காசோலை என்றால் எதிரி கொடுத்த காசோலை ஆகும். நான் உண்மையை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Feb 7, 2026 12:14 PM

Judicial Magistrate 2, Sattur